**வாக்குமூலம்**

**நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம், திண்டுக்கல்,**

**வழக்கு எண். சிசி.227/2021**

**வழக்கு சாட்சி. 1**

| | | |
|---|---|---|
| பெயர் | : | M.S.பாலன் |
| தந்தை பெயர் | : | செல்லம் |
| கிராமம் | : | காந்திபுரம், ரவுண்டு ரோடு |
| தாலுக்கா | : | திண்டுக்கல் |
| ஜாதி | : | |
| தொழில் | : | ரியல் எஸ்டேட் |
| சமயம் | : | |
| வயது | : | 56 |

**15.06.2023**

**எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

<u>குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி</u>

1) நான் எதிரிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்புக்கு எதிரி பதில் அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பில் காசோலையில் உள்ள கையொப்பத்தை மறுத்து அனுப்பியிருந்தார் என்றால் சரிதான். பதில் அறிவிப்பில் நான் குறிப்பிட்டிருந்த தொகை சட்டப்படியான பெறக்கூடிய கடன் தொகை அல்ல என்று குறிப்பிட்டு (Ilegal Dept) அனுப்பபட்டது என்றால் சரிதான். கடந்த 2012ம் ஆண்டு எதிரி என்னிடம் ரூ.5 லட்சத்தை கடனாக பெற்றுக் கொண்டு அதற்காக ஒரு புரோ நோட்டு கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல.

2) அந்த நேரத்தில் புரோ நோட்டுடன் சேர்த்து கையொப்பம் செய்யாத பூர்த்தி செய்யாத வெற்று காசோலை பொறுப்பிற்காக கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரி புரோநோட்டில் தேதி வாங்கிய கடன் தொகைக்கு ரூ.5 லட்சத்தை திருப்பி செலுத்தி விட்டார் என்றால் சரியல்ல. மேற்படி புரோ நோட்டு மற்றும் காசோலையை திருப்பி தருவதாக உறுதி அளித்தும் அதை திருப்பி தரவில்லை என்றால் சரியல்ல. 24.07.2021ம் தேதி நான் எதிரியை சந்தித்து கந்து வட்டியாக வட்டி சேர்த்து கொடுத்தால்தான் ஆவணங்களை திருப்பி தருவதாக மிரட்டினேன் என்றால் சரியல்ல.

3) புரோ நோட்டுடன் எதிரி கொடுத்த காசோலைகளை வெவ்வேறு நபர்களை வைத்து எதிரிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என் மீதும், மற்ற நபர்கள் மீதும் வருமான வரி துறைக்கு புகார் கொடுத்து அது விசாரணையிலிருந்து வருகிறது என்றால் சரியல்ல. 2018ம் ஆண்டுக்கு பிறகு எதிரிக்கும் எனக்கும் இடையே குற்ற வழக்கு நிலுவையில் இருக்கும்

நிலையில் 2012ம் ஆண்டு வாங்கிய பணத்திற்கு 8 ஆண்டுகளுக்கு பிறகு 2020ம் ஆண்டில் காசோலை கொடுத்ததாக சொல்லப்படுவது தவறு என்றால் சரியல்ல. மேற்படி தொகை மேற்படி கடன் சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்து அந்த பேச்சு வார்த்தையில் மேற்படி கடனுக்காக காசோகைல கொடுத்தார்.

4) நான் எதிரி மீது மேற்படி கடன் தொகைக்காக கொடுக்கப்பட்ட வழக்கில் சமரசமாக சென்று விட்டதாக காவல்நிலையத்தில் வாக்குமூலம் எதுவும் கொடுத்தேனா என்றால் எனக்கு காசோலைக்கான பணம் திருப்பி கொடுத்தால் வழக்கை வாபஸ் வாங்கி கொள்வதாக சொல்லியிருந்தேன். ஆனால் எதிரி காசோலைக்கான பணம் கொடுக்காததால் வழக்கை வாபஸ் வாங்கவில்லை. நான் தற்போது சொன்ன விசயத்தை வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகாரிலோ எனது சொல்லியுள்ளேனா என்றால் எனது வழக்கறிஞரிடம் சொன்னேன். நிரூபண வாக்குமூலத்தில் மேற்படி விசயத்தை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

5) எதிரி என்னிடம் காசோலை கொடுத்து கடன் வாங்கவும் இல்லை என்றாலும், காசோலையில் குறிப்பிட்டுள்ள தொகை கடனாக பெறவேண்டிய அவசியம் எதுவும் எதிரிக்கு இல்லை என்றாலும் காசோலை தொகை சட்டப்படியான கடன் தொகை இல்லை என்றாலும் சரியல்ல. எதிரி கொடுத்த புரோநோட்டில் உள்ள எதிரியின் கையொப்பத்தை பார்த்து காசோலையை நானாக பூர்த்தி செய்து கொண்டு எதிரிக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்தேன் என்றால்சரியல்ல. நான் இந்த வழக்கை மாற்று முறை ஆவணச்சட்டத்திற்கு உட்பட்டு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

6) வழக்கு காசோலையை தடய அறிவியல் துறைக்கு அனுப்ப தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

N MEENATCHI

Digitally signed by N MEENATCHI
Date: 2023.07.01 16:35:39 +0530

Judicial Magistrate No.II
Dindigul.